www.tamilarangam.net



# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EPRLF

## EPRLF IN EELAM STRUGGLE

பாசமிகு ஈழ மக்களே,

ஈழப்போராட்டத்தின் மிகக்கடினமான காலகட்டம் இப்போது கண்களில் தென்படுகிறது. ஆதிக்கமும், அராஜகமும் ஒன்றாய் கைகோர்த்து ஈழப்போராட்டத்தை நசுக்கி விடுவதற்கு முன்னேறிவருகின்றன. இதுவரைகாலமும் சிறீலங்கா நவபாசிச அரசின் நரவெறி அடக்குமுறைகளை மாத்திரம் இரத்தச்சிதறல்களாகக்கண்ட நாம் இன்று புதிய அடக்குமுறையாளர்களின் கோரத்தாண்டவங்களைக்காணவேண்டிய வரலாற்றுக்கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திரத்திற்காகப்போராடும் உன்னதமானவர்களின் சுதந்திரம் மறுக்கப்படுவதை நாம் எப்போதுமே அனுமதிக்கப்போவதில்லை என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுதியான கொள்கைகளையும், அராஜகத்துக்கு எதிராக எமது கடைசிப்போராளி இருக்கும் வரை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராடும் என்ற உறுதியான பிரகடனமும் இன்று போராட்டத்தில் பிற்போக்கு சக்திகளின் பலமான எதிர்ப்பை எங்களுக்கு சம்பாதித்துக்கொடுத்திருக்கிறது.

இந்த பிற்போக்குச்சக்திகள் ஈழப்போராட்டத்தை திசை திருப்புவதையே மொத்த நோக்கமாகக்கொண்டு அரசியல் வறுமை கொண்ட இயக்கங்களுக்குள் ஊடுருவி மேலும் சில ஆதிக்கச்சக்திகளுடன் கைகோர்த்து புரட்சிகர சக்திகளை செயலிழக்கச்செய்யும் புதைகுழிகளை தோண்ட ஆரம்பித்துள்ளன. போராட்டத்தை எமது பொது எதிரியான சிறீலங்கா நவபாசிச அரசுக்கும் அதன் ஏகாதிபத்திய, முதலாளித்துவ எஜமானர்களுக்கும் எதிராக முடுக்குவதை விடுத்து இன்று சில இயக்கங்களும் எமக்கெதிரான சேறடிப்பையே தமது "புனித கடமையாக" செய்துவருகிறார்கள். அகன்ற சிந்தனையும் நீண்டநோக்கும் அற்ற இவர்கள் எமது போராளிகளுக்கும், போராட்டத்துக்கும் நீள, அகல குழிகளை எப்படி வெட்டுவது என்பதிலேயே தமது சக்திகளைச் செலவழிக்கின்றன.

இக்கட்டான இந்நிலையிலும் இரத்தத்தோடு கலந்து விட்ட எமது போராட்டம் தொடர்கிறது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வரலாற்றுப்பங்களிப்பை தொடர்கிறது. எமது உன்னதமான போராளிகள் பொது எதிரிக்கு எதிராக உக்கிரமாகப் போராடுகிறார்கள். எமது பாசமிகு மக்கள் உயர்ந்த ஒரு வரலாற்றைப்படைக்கிறார்கள். போராட்டம் தொடர்கிறது. பிற்போக்குச்சக்திகளின் சதிகளும் தொடர்கின்றன, இவை புரட்சிப்பாடத்தில் புதியவையல்ல. புட்டிப்பார்க்காதவையும் அல்ல. இன்றைய இந்த அனுபவங்கள் மக்களுக்கு பல பாடங்களைக்கற்பிக்கும்; நடுத்தர வர்க்க குணாம்சக்கோட்டைகளைத்தகர்த்து இந்த பிற்போக்கு சக்திகளின் குணாம்சங்களை உணர்த்தும், உறுதியான போராட்டத்துடன் மக்களை இணைக்கும். சுதந்திரத்தின் மகத்துவத்தை விளக்கும். இது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கருத்து.

எங்கள் தவறுகள் உங்களினால் விமரிசிக்கப்படட்டும், நாம் திருந்துகிறோம். எங்கள் வழிமுறைகள் உங்களால் விமரிசிக்கப்படட்டும் நாம் செழுமைப்படுகிறோம். எங்கள் பார்வைகள் எப்போதும் உங்களை நோக்கியே ஏனெனில் எங்கள் எஜமானர்கள் துப்பாக்கிகள் அல்ல. மக்களே! பாசமிகு ஈழமக்களே!

சமீப நாட்களில் ஈழப்போராட்டத்தில் நாம் பதித்த சிறு காலடிச்சுவடுகளின் அடுத்த தொகுப்பை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம். உயிரைத்துச்சமென மதித்து உன்னதமான போராட்டத்தை முன்னெடுக்கும் உயர்ந்த எங்கள் தோழர்களின் கரங்களைப்பலப்படுத்துங்கள், போராட்டத்தோடு நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● 8 பொலிஸார் பலி ● 3 வாகனம் சேதம்

# மட்டு-கல்முனை வீதி சம்பவத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் உரிமைகோருகிறது

யாழ்ப்பாணம். சனி மட்டுநகர் கல்முனை வீதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பொலிஸார் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) உரிமைகோரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டுநகர் கல்முனை வீதியிலுள்ள புத்தூர் என்னும் இடத்தில் ரோந்து சென்ற பொலிஸாருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப்பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையில் இடம் பெற்ற நேரடி மோதலில் 8 பொலிசார் கொல்லப்பட்டனர், பலர் காயமுற்றுள்ளனர். இதன் போது அவர்கள் பயணம் புரிந்த மூன்று வாகனங்களும் எம்மால் சேதமாக்கப்பட்டன. அவர்களிடமிருந்து ஆயுதங்களும், சில ''வோக்கி டோக்கி'' உபகரணங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன'' இச்சம்பவத்தில் எமது தரப்பில் எதுவித இழப்புகளுமில்லை.

''மேலும் மட்டுநகரில் கன்னன்குடா என்னும் இடத்தினை சுற்றிவளைக்க இராணுவத்தினர் [illegible]பொழுது மக்கள் விடுதலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் [மோட்டார் தாக்குதல்] சிலர் கொல்லப்பட்டும், பலர் காயமுற்றும் உள்ளனர்: இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.''

## மட்டக்களப்பில் இரு ராணுவ முகாம்கள் மீது ஒரு மணிநேர தாக்குதல்

— ஈ. பி. ஆர். எல். எவ்

யாழ்ப்பாணம். திங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவு தாண்டி ஆகிய இராணுவ முகாம்களை நோக்கி தமது விடுதலைப் படையின் விசேட படைப் பிரிவு ஒருமணி நேரத்துக்கு மேல் கடும் தாக்குதல் மேற்கொண்டதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

நேற்று முன்தினமிரவு 7 30 மணிக்கு வவுணதீவு தாண்டி ஆகிய ராணுவமுகாம்களை நோக்கி கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் தாக்குதல்களில் ஒன்றாக இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஜி ஏ. எல். ஜ 30 துப்பாக்கிகளும், எம். 968 பி. பி. ரக 60 எம். [illegible] மோட்டார்களும் தன்னியக்க துப்பாக்கிகளும் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் எதிரிப்படையினர் பலத்த சேதத்திற்கும் காயங்கட்கும் உள்ளானார்கள். எமது தரப்பில் எதுவித சேதமுமில்லை. இன்னுமே படைப்பிரிவு இராணுவத்தை சுற்றிவளைத்துத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள[illegible]

### றேடியோ, ரி. வி., டெக்
## அனுமதிப்பத்திரம் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம். செவ். வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, டெக் ஆகியவற்றின் 87-ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரங்களை நாளை முதல் தம்மிடமிருந்து சகல பாவனையாளர்களும் பெற்றுக் கொள்ளுமாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது.

அனுமதிப் பத்திரங்கள் பெறுவதற்கான முடிவுத் திகதி 86 டிசம்பர் 31 ஆகும். எமது அனுமதிப்பத்திரம் அமுலுக்குவரும் திகதியிலிருந்து சிறிலங்கா அரசின் அனுமதிப்பத்திரங்கள் குடாநாட்டினுள் செல்லுபடியாகாது. ஒருவருடத்திற்கான அனுமதிப் பத்திரக் கட்டணமாக வானொலிக்கு 25 ரூபாவும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு (கறுப்பு, வெள்ளை) 100 ரூபாவும் வர்ணத்தொலைக் காட்சிப் பெட்டிக்கு 250 ரூபாவும் டெக்கிற்கு 100 ரூபாவும் அறவிடப்படும்.

இம்முயற்சி ஈழத்தில் சிறிலங்கா அரச நிர்வாகம் செயலிழந்து போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதை நிறுவுவதாக உள்ளது. இதற்கு சகல மக்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி போராட்டத்தை வலுப்படுத்தும் படி கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படையினருடன் 'மக்கள் விடுதலைப்படை' மோதல்

(ஊர்காவற்றுறை நிருபர்)

மக்கள் விடுதலைப் படைக்கும் கடற்படையினருக்குமிடையில் நேற்றுக்காலை பலத்த மோதல் ஏற்பட்டது. அரை மணித்தியாலமளவில் இம்மோதல் நீடித்தது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து காரைநகரிலிருந்து பின்னர் ஏவிவிடப்பட்ட 'ஷெல்'கள் இண்டு சொன்னுச்சி கடையடியில் வந்து விழுந்த போது ஒரு வயோதிபருக்கு பலத்த காயம் ஏற்பட்டது

இச்சம்பவம் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

'நேற்றுக் காலை ஊர்காவற்துறையில் கடற்படையினருக்கும் மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது

'இரு விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் ஊர்காவற்துறையில் இறங்க முற்பட்ட போது மக்கள் விடுதலைப் படைவீரர்கள் எதிர் தாக்குதலை மேற்கொண்டனர் இம்மோதலில் கடற் படையினர் சிலர் காயமடைந்ததுடன் கடற்படையினர் பின்வாங்கி சென்றனர்.'

நமது கரங்களைப் பிணைத்துள்ள
அடிமை விலங்கினை அறுக்கப்படாவிட்டால்
எல்லாம் நாம் அடிமைகள்தான்
அடிமையாய்... அகதியாய்...
மரணிப்பதற்கா இந்த வாழ்வு?
அடக்குமுறைக்கெதிராக
உறுதியாகப் போரிடுவோம்.
ஆதிக்கத்துக்கெதிராக
உரத்துக் குரல்கொடுப்போம்.

www.tamilarangam.net

# 'புளொட்'மீதான தடையை புலிகள்உடன்நீக்கவேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

(யாழ்.அலுவலக நிருபர்)

புளொட் மீதான தடையை உடனடியாக புலிகள் இயக்கம் நீக்கி அவர்கள் சுதந்திரமாக முடிவுகளை எடுக்க அனுமதிக்கப்படவேண்டுமென்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) இங்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அறிக்கை விபரம் வருமாறு:

ஈழத்தில் மீண்டும் ஒரு இரத்தக்களரியை தவிர்ப்பதை நோக்கமாகக்கொண்டு தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தனது அனைத்து செயற்பாடுகளையும் ஈழத்தில் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று நேற்றைய பத்திரிகைகள் வாயிலாக ஈழமக்களுக்கு கிடைத்திருக்கின்றது.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தினுள் தலைவிரித்தாடிய அராஜகத்துக்கு எதிராக விடாப்பிடியாகப் போராடிவந்த போராளிகள் கடைசிக்கணம்வரையில் மக்களுக்கான தனது பணியை தம்மால் இயன்றவரை ஆற்றிவந்துள்ளனர்.

ஈழப்போராட்டம் எங்கு கொண்டுசெல்லப்படுகிறது என்ற நியாயமான கேள்விகளுக்கு பதில் தேடவேண்டிய நேரம் வந்துவிட்டது. உண்மையான இலட்சியங்களோடு மக்களுக்கான விடுதலையை நேசித்து அதற்காக உழைத்த போராளிகள் ஒவ்வொரு கணமும் மரணபயத்தோடு திரிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பல போராளிகள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். சாவு அவர்களை பின்தொடர்ந்தவண்ணம் உள்ளது.

மக்களை நம்பிய, மக்களுக்காக போராடிய போராளிகள் பலர் இந்த மண்ணில் தீமூட்டி எரிக்கப்படுவதை இனியுமொருதடவை எமது மக்கள் அனுமதிக்கப்போவதில்லை.

மக்களை பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் அதே ஆயுதம் ஒரே இரவில் மற்றொரு விடுதலை ஸ்தாபனத்தை செயற்பட தடைவிதித்துள்ளது. இது ஆபத்தின் அறிகுறியேயாகும். நன்மையும்-தீமையும், போராட்டமும்-அராஜகமும் சமாந்தரமாக நடக்கின்றன, நுணுகிப்பார்க்கத் தவறும் ஒவ்வொரு கணமும் எமது தலையில் நாமே மண்ணை அள்ளிப்போடும் கதையாகவே முடியும், கிழக்கிலும் வன்னியிலும் எதிர்ப்படையின் காட்டுமிராண்டித்தனமான அழித்தொழிப்பு நடவடிக்கைகள் மக்களை வேட்டையாடிய வண்ணமே உள்ளது.

### பேச்சுவார்த்தை நாடகம்

பேச்சுவார்த்தை நாடகம் சர்வதேச அரங்கில் போராட்டத்தை நசுக்குவதற்கான தயாரிப்பு உக்கிரமடைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இரத்தப்போராட்டத்தை குத்தகைக்கு எடுத்த மனோபாவம் கேடுகளை விளைவிக்கும். அனைத்து போராளிகளுக்கிடையேயும் உறுதியான ஐக்கியம் வளர்த்தெடுக்கப்படவேண்டிய காலகட்டமிது.

இந்தப் பின்னணிகளில் புளொட்மீதான தடை நீக்கப்படல் வேண்டும்.

கைதுசெய்யப்பட்டுள்ள புளொட் போராளிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அவர்கள் சுதந்திரமாக முடிவுகளை எடுக்க அனுமதிக்கப்படவேண்டும்.

போராளிகளுக்கிடையே ஐக்கியத்தை சீர்குலைக்கும் வகையிலான ஆயுத அச்சுறுத்தல்கள் நீக்கப்படவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். எமது இந்த நியாயமான நிலைப்பாட்டுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகிறோம்.

தோழர்களே!

புதிய, புதிய நெஞ்சங்கள் ஈழப்போராட்டத்தின் கருத்தை நெருங்க வரும் இந்தக் காலகட்டத்திலே ஆதிக்கக் கரங்களை முறிக்கவும், எங்கள் கால்களில் எங்கள் பலத்தில் எழுந்து நிற்கவும், உன்னதமான எங்கள் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள். அனைத்துத் தொடர்புகட்கும்....

EPRLF (FRANCE)
10, RUE DES MARTYR
75010 - PARIS.

தொலைபேசி: 48-74-98-30

---

மக்கள் விடுதலைப்படை

## ஹெலிமீது தாக்குதல்; இரு இராணுவத்தினர் காயம்

யாழ்ப்பாணம், செங். மட்டுநகரிலுள்ள கன்னங்குடாவில் ரோந்துபுரிந்த ஹெலிகொப்டர் ஒன்றின்மீது தமது மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:.

''நேற்று அதிகாலை மட்டுநகரில் உள்ள கன்னங்குடா எனும் இடத்தில் ரோந்து புரிந்த ஹெலிகொப்டர் ஒன்றின்மீது கலி-30 ரக துப்பாக்கியினால் மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டனர்.

''இத்தாக்குதலுக்கு இலக்கான ஹெலிகொப்டர் அவசர அவசரமாக அண்மையிலுள்ள ராணுவ முகாமில் தரையிறக்கப்பட்டது இதில் விமான ஓட்டிகளாகப் பயணம்செய்த இரு ராணுவத்தினரும் காயமுற்று மட்டுநகர் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. ஹெலிகொப்டருக்கு ஏற்பட்ட சேதம்பற்றிய பூரண விபரங்களைப் பெறமுடியவில்லை''.

[மா

---

மாங்குளம் ——

## மக்கள் விடுதலைப்படை இராணுவம்மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு மாங்குளம், இராணுவமுகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது தமது மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் 'ஷெல்' தாக்குதலும் துப்பாக்கிப்பிரயோகமும்மேற்கொண்டதைத்தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்குள் திரும்பிவிட்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் இராணுவத்தினர் தரப்பில் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் தமதுதரப்பில் எதுவிதசேதமும் ஏற்படவில்லை என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா

www.tamilarangam.net

# அரசின் தபால்தலை ஒட்டப்பட்ட கடிதங்களுக்கு குடாநாட்டில் தடை

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பணம், செவ்,

''சிறிலங்கா அரசின் தபால் தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்கள் யாழ். குடா நாட்டுக்குள் பரிவர்த்தனையிலிருந்து ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியால் தடை செய்யப்பட்டுள்ளது''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நெடுந்திவு தபாற்கந்தோருக்கு அனுப்பப்பட்ட தபாற்பைகள் கடற்படையினரால் சோதனையிடப்பட்டன. அப்போது ''ஈழம் தபால் தலைகள்'' ஒட்டப்பட்ட கடிதங்களும் தபாற்பையில் இருந்தன. இவற்றை ஆச்சரியத்துடன் பார்வையிட்ட கடற்படையினர் தபால்களை மீண்டும் தபால்பைகளுக்குள்ளேயே வைத்து விட்டனர் அது உரிய விலாசங்களுக்கு சென்றடைந்தன.

''ஈழம் தபால் தலை'' புழக்கத்தில் வரும் மட்டும் சிறீலங்கா அரசின் தபால் தலைகள் யாழ். குடா நாட்டுக்குள் முற்றாக தடுக்கப்படவில்லை. இப்போது தனியார் கடைகளிலும், வேறு இடங்களிலும் ''ஈழம் தபால் தலைகள்'' விற்பனை செய்யப்படுகின்றன. எனவே ஒரு வாரத்திற்குள் சிறீலங்கா அரசின்தபால் தலைகள் யாழ். குடா நாட்டுக்குள் பரிவர்த்தனையில் இருந்து தடை செய்ய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முடிவெடுத்துள்ளது. (இ)

ஊர்காவற்றுறையில் கடற்படையை எதிர்த்

# மக்கள் விடுதலைப் படை

# பலத்த தாக்குதல்

## படையினர் பலர் கொலை

யாழ்ப்பாணம், புதன்

காரைநகா கடற்படைமுகாமிலிருந்து பீரங்கிப் படகில் வந்த கடற்படையினர் நேற்று மாலை 4-30 மணியளவில் ஊர்காவற்றுறையில் இறங்க முற்பட்ட சமயம் தமது மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் கடற்படையினர் பலர் கொல்லப்பட்டும், காயமடைந்துமுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

'மக்கள் விடுதலைப் படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கிய கடற்படையினருக்கு உதவுவதற்காக இரண்டு ஹெலி டார்களில் வந்த விம படையினர் தரைஇறங் பட்டவர். விமானப் ப னை தரையிறங்க மல் உக்கிரமான தாக் மக்கள் விடுதலைப் படை ரால் மேற்கொள்ளப்பட்

'தமிழீழ மக்கள் விடு கழகத்தினரின் மண்மு அரண்களுக்குள் பதுங் ந்து மக்கள் விடுதலைப் ப னர் நவீனரக ஆயுதங்க தாக்குதல் நடத்தினர் ம விடுதலைப் படை தரப்பி வித இழப்புமில்லை. (ய

நடுகடலில் துப்பாக்கிச் சண்டை:

# ஈழப்போராளிகள்

தினகரி 18-10-86

# 21 பேர் வீர மரணம்

கொழும்பு. அக். 18-

நடுக்கடலில் நடந்த துப்பாக்கிச் சண்டையில், 21 ஈழப் போராளிகள் வீர மரணம் அடைந்தார்கள்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் காரைதீவு என்ற கடற் பகுதியில் படகு ஒன்றில் சென்று கொண்டு இருந்த போராளிகள் மீது, சிங்கள கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

### 15 பேர் பலி

இதில் படகில் இருந்த 15 போராளிகள் பலியானார்கள். இதேபோல் வேறு இடத்தில் சிங்கள கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 6 போராளிகள் பலியானார்கள்.

வவுனியா [மாவட்டத்தில் உள்ள மாங்குளம் ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட, மூன்னூறு ராணுவத்தினர் வன்னிவிளான் குளம் எனும் இடத்தில் உள்ள பாடசாலையிலும், அதன் அருகில் உள்ள கோவிலிலும் புதிய மினி ராணுவமுகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடு பட்டனர். இச்செய்தியை அறிந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைபடையினர், மிகப் பெரிய தாக்குதல் ஒன்றை ராணுவத்தினர் மீது மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஏனைய முகாம்களிலிருந்து ராணுவத்தினர் உதவிக்கு வந்துவிடாமல் தடை செய்வதற்காக, மாங்குளம், துணுக்காய்வீதியில் உள்ள இரண்டு பாலங்களும் தகர்க்கப்பட்டன. இத்தாக்குதலில் பல ராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலை அடுத்து, வன்னிவிளான்குளத்தில் அமைக்கப்பட்ட ராணுவ முகாமைவிட்டு ராணுவத்தினர் வெளியேறி, மாங்குளம் ராணுவ முகாமை சென்று அடைந்தனர். போராளிகளின் தாக்குதலால் புதிதாக திறக்கப்படவிருந்த ] ராணுவ முகாம் நேற்று மூடப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

இத்தாக்குதலில் மக்கள் விடுதலை படையை சேர்ந்த திரூட்டன் என அழைக்கப்படும் அரசரத்தினம்வீரமரணம் அடைந்துள்ளார். இவர் தருமப்புரம் என்ற இடத்தை சேர்ந்தவராவர்.

திருக்கோவிலில்—

# அதிரடிப்படையினருடன் மக்கள் விடுதலை படைமோத

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருக்கோவிலில் அதிரடிப் படையினருக்கும் தமது இராணுவப்பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையே நடைபெற்ற நேரடி மோதலில் 10 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'கடந்த 17-ம் திகதி அம்பாறை மாவட்டம் திருக்கோயில் என்னும் இடத்தில் வாகனங்களில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை மு ணியின் இராணுவப்பிரிவ மக்கள்விடுதலைப்படையி ம்குமிடையே நேரடி மே ஏற்பட்டது. இச்சம்பவ போது அதிரடிப்படை மீது மக்கள் விடுதலைப் ப யினர் எம். 968, எவ். பி ரக 60 எம்.எம்.மோட்ட தாக்குதலும் துப்பாக்கித் குதலும் நிகழ்த்தினர்.

இந்த நேரடி மோத போது எமது தோழர்கள் வர் சிறு காயங்களுக்கு னார்கள். இந்நேரடி மோத சக விடுதலை இயக்கமொ றினைச் சார்ந்த போராளி இருவர் எமது தோழர் டன் இணைந்து செயற் டனர்.'' (

www.tamilarangam.net

## போராளிகளுடன் மோதல்

# 21 இலங்கை ராணுவ வீரர் பலி

தினமணி 4.10.86

சென்னை, அக். 3—— இலங்கையில் திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் கடந்த செவ்வாய் முதல் தமிழ்ப்போராளிகளுடன் நடந்த மோதல்களில் இலங்கை ராணுவப்படையைச் சேர்ந்த 21 வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று சென்னையில் தமிழ்ப்போராளி கோஷ்டி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்ப்போராளிகளின் மறைவிடங்களைக் கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்யவோ, அல்லது கொல்லவோ இலங்கை ராணுவத்தின் மூன்று பிரிவுகள் கடந்த செவ்வாய் முதல் தேடுதல் இயக்கத்தைத் துவக்கின என்று அவ் வட்டாரங்கள் கூறின.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீபத்தில் ராணுவத்தினர் தமிழ்ப்போராளிகளுக்கு எதிராக மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை போன்றதாகும் இந்நடவடிக்கை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் மம்முடுவா கிராமத்தின் மீது குண்டு வீசிய ராணுவ ஹெலிகாப்டரை போராளிகள் கோஷ்டி ஒன்றைச் சேர்ந்தவர்கள் சுட்டு வீழ்த்தினர். இதில் அதிலிருந்த 4 விமானப்படை வீரர்களும் உயிரிழந்தனர்.

சம்பல் தீவு பகுதியில் நான்கு வீரர்களும், காரைநகர் விமான தள பகுதியில் 4 விமானப்படை வீரர்களும் கொல்லப்பட்டனர். போராளிகளைத் தேட இவர்கள் புறப்பட்டபோது கொல்லப்பட்டனர்.

இலங்கையில் வெள்ளியன்று தமிழ்ப் போராளிகள் தனித்தனியாக நடத்திய இரு தாக்குதல்களில் ஒரு ராணுவ வீரர் மற்றும் 7 சாதாரண ஜனங்கள் கொல்லப்பட்டதாக ராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

### '9 வீரர்கள் பலி'

இதற்கிடையில் மரவீவ ராணுவ முகாமிலிருந்து தேடுதல்-அழித்தல் வேட்டைக்காக வெளியேறிய ராணுவ வாகனத் தொடர் மீது தமிழீழ விடுதலைப் போராளிகள் கண்ணி வெடி தாக்குதல் நடத்தியதில் ஒரு ஜீப் முற்றிலும் அழிந்தது; ஒன்பது ராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊரடங்கு

கொழும்பு, அக். 3—— இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழனன்று இரவு 8 மணி முதல் வெள்ளிக்கிழமை காலை 5 மணி வரை இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இதனை அரசு அதிகாரிகள் கூறியதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

## மின்விநியோகம் காரைநகர் முகாமில் துண்டிக்கப்பட்டது

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள். காரைநகர் கடற்படைமுகாமிற்கான மின் விநியோகத்தைத் தாம் துண்டித்துள்ளதாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்.) அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக ஈ.பி.ஆர். எல். எவ். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"எமது நிலத்தில் ஆக்கிரமிக்கும் நோக்குடன் முகாமிட்டுள்ள சிறீலங்கா அரச படையினரைத் தொடர்ச்சியான தாக்குதல்கள்மூலம் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கச் செய்துள்ளதைத் தொடர்ந்து அம்முகாம்களுக்குத் தொடர்ச்சியான நெருக்கடிகளைக் கொடுத்துப் பின்வாங்கச்செய்யும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். இம்முயற்சியில் ஒன்றாக கடந்த 27ம் திகதி காரைநகர் கடற்படை முகாமிற்கான மின் விநியோகத்தைத் துண்டித்துள்ளோம். இதனால் படையினர் தமக்கான மின் தேவையைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறான நெருக்கடிகள் மேலும் தொடரும்".

இவ்வாறு அவ்வறிக்கை கூறுகிறது. [வா]

## இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன். மக்களைக் காக்க வீரமுடன் போரிடுவதில் முன்னின்ற தோழனை இழந்துவிட்டோம். இத்துயரை தாங்க முடியாத போதும் தொடர்ந்தும மக்கள் விடுதலைக்காகப் போராடுவோம்" என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை வீரனாக இருந்து நேற்று மரணமான போலின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய மு. டேவிற்சன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தமிழீழ இராணுவம் ஆகிய இயக்கப் பிரதிநிதிகளும் பெருந்தொகையான மக்களும் போலின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். [ரா]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தாமரைச்செல்வி [பானு]
மலர்வு: 22-08-1967
உதிர்வு: 13-07-1986

தாமரைச் செல்வி,
ஈழப் பெண்களின்
இடர்கள் களைந்திட
இன்னுயிர் ஈந்த எங்கள்
நெஞ்சமே
வஞ்சகர் மத்தியில
வஞ்சியர் வாழ்ந்திட
வழிவகை காட்டிய
அன்புவடிவமே
ஈழமக்களின் புரட்சி
விடுதலைக்கு
முன்னணி வகித்த நின்
பணிகண்டு ஈழமக்கள்
இன்புற்றிருந்த வேளை,
அகன்ற வானில்
அழகாய் ஜொலித்த
நட்சத்திரம்
இடை நடு வேளையில்
உதிர்ந்ததுபோல
விடுதலை வேள்வியில்
நின்பலிகண்டு
எங்கள் இதயம்
கொட்டுது உதிரம்
தாலாட்டி வளர்த்த
தாயவள் தவிக்க
ஆதரவு காட்டிய
அண்ணன்மார் ஏங்க
உறுதுணை புரிந்த
உறவினர் கலங்கிட
உத்தமி உந்தன் உயிர்
உதிர்ந்ததேன்!
தாரகை நடுவன்
தண்மதிபோல
தரணியில் வாழ்ந்த
தாமரைச் செல்விநீ,
தார்மீக அரசின்
தறுதலைப் படைகளின்
துப்பாக்கிக் குண்டுகள்

உன்உயிர் எடுத்ததே. உன்உடல்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் நிச்சயம் சுவர்க்கத்தின் சிகரத்தை எட்டும். தாயவளே நிந்தன் ஆத்மா சாந்தி அடைய தேவனை தினமும் வேண்டி நிற்போம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாசத்தாய்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.
பாலைக்குளி,
அடம்பன், [C 4027]

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் பத்மநாபா அறிக்கை

13-10-86

சென்னை, அக். 13:

இலங்கை பிரச்சினைக்கு ராணுவ ரீதி தீர்வு காண இலங்கை அரசுக்கு அமெரிக்கா இதுவரை மறைமுகமாகத்தான் உதவி வந்தது. இப்போது தாங்கள் அளிக்கும் ராணுவ உதவி பற்றி அமெரிக்கா பகிரங்கமாகவே அறிவித்து விட்டது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் கே. பத்மநாபா ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலை இயக்கத்தினர் நிராயுதபாணிகளாக்கப்பட்டாலொழிய, இலங்கை பிரச்சினைக்கு தீர்வு வராது என்று இம்மாதம் 3-ந்தேதி பொதுக்கூட்டத்தில் ஜெயவர்த்தனே அறிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி டெல்லி வந்திருக்கும் சமயமாக பார்த்து இத்தகைய அறிவிப்பு வந்துள்ளது. பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய அரசாங்கம் செய்யும் முயற்சிகள் அனைத்தும் இதன் மூலம் குலைக்கப்படுகின்றன.

அமெரிக்கா இந்த பிராந்தியத்தில்' தனது ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்வதே இத்தகைய நடவடிக்கைகளின் நோக்கமாகும். ராணுவ ரீதி பரிகாரம் காண்பது என்ற தனது உண்மையான நோக்கத்தை மறைப்பதற்காகவே ஜெயவர்த்தனே ஆட்சி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் பேச்சு என்று நாடகம் ஆடுகிறது.

பேச்சுவார்த்தை மூலமாக உடன்பாடு காண்பது என்ற இந்திய அரசின் முயற்சி குறித்து எங்கள் நிலை என்ன என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இலங்கை மக்கள் ஏ அடிப்படை

## சமரச பேச்சு ஒரு நாடகம்

உரிமைகள் பெற இந்தியா செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதுதான் எங்கள் கொள்கை.

ஆனால் அதே நேரத்தில் ராணுவ தீர்வில் ஜெயவர்த்தனே அரசு நம்பிக்கை கொண்டிருக்கும்வரை, நாங்கள் ஆயுதம் எடுப்பதற்கு காரணமாக இருந்த நிலைகள் நீடிக்கும்வரை நாங்கள் ஆயுதங்களை கீழே போடுவது என்ற பிரச்சினையே இல்லை. பேச்சுவார்த்தை நடத்துவதற்கோ, உடன்பாடு காண்பதற்கோ இதை ஒரு முன் நிபந்தனையாக நாங்கள் ஏற்க முடியாது.

சமாதானத்தையே எங்கள் மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் அடிமைப்பட்டு பெறும் சமாதானம் வேண்டாம். நாங்கள் அரசின் பயங்கரவாதத்துக்கு அடிபணிய மாட்டோம். பயங்கரவாதத்திலும் இறங்க மாட்டோம்.

மக்களின் ஆதரவைப் பெற்ற ஆயுதப் போராட்டமே எங்கள் போராட்டம். பிரிட்டன், இஸ்ரேல், தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான் நாடுகளுடன் கூட்டு சேர்ந்து நிற்கும் இலங்கை அரசுடன் நடத்தும் போராட்டம் இது. சர்வதேச பயங்கரவாதம், அரசு பயங்கரவாதம் ஆகியவைகளை எதிர்க்கும் போராட்டமே எங்கள் போராட்டம். நியாயம் நிலை நாட்டப்படும் வரை, இலங்கையின் அனைத்து மக்களும் சமத்துவம், சமாதானம், நல்லுறவுடன் இணைந்த வாழ்க்கை பெறும் வரை ஆயுதம் ஏந்திய எங்கள் போராட்டம் தொடரும் என்று பத்மநாபா அறிக்கையில் மேலும் கூறியிருக்கிறார்.

## ஈழமக்கள் புரட்சிகர முன்னணி உறுதி

சென்னை, அக். 12—

இலங்கைத் தமிழர்களின் அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளை உத்தரவாதம் செய்யக்கூடிய வகையிலான தீர்வு ஒன்றை காண்பதற்கு இந்திய அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஞாயிறன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

தமது மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்; ஆனால் சமாதானத்தின்பேரில் அடிமைகளாக ஆக்கப்படுவதை திட்டவட்டமாக நிராகரிக்கிறார்கள் என்றும் அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது. 13.10.86

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரின் ஆயுதப் போராட்டம் மக்கள் ஆதரவுடன் பயங்கரவாதத்தை எதிர்த்து நடத்தப்படுவதாகும். இலங்கைத் தீவில் ஈழ மக்களும், சிங்கள சகோதரர்களும் ஒற்றுமையாக வாழும் சூழ்நிலை உருவாகும்வரை இந்த அமைப்பினர் ஆயுதம் தாங்க வேண்டிய கட்டாய நிலை உள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

ஈழ மக்கள் புரட்சிகர- விடுதலை முன்னணியின் 'ஈழ வானொலி'யை வாரந்தோறும் செவ்வாய், சனி ஆகிய தினங்களில் இரவு 9 மணிமுதல் 10 மணிவரை F.M 105·25 MHS அலை- வரிசைகளில் கேளுங்கள்

# மட்டு.நகரில் கமாண்டோக்கள்- மக்கள்விடுதலைப்படை கடும் சமர்

யாழ்ப்பாணம், சனி

மட்டு நகரில் முகாமிட்டுள்ள அதிரடிப்படையினர் மீது தமது மக்கள் விடுதலைப் படையினர்கடும் மோட்டார்த் தாக்குதல் மேற்கொண்டதில் பலகொமாண்டோக்கள்கொல்லப்பட்டும் பலர் காயமுற்றும் உள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டுநகரில் உள்ள கன்னங்குடா, தாண்டி, வவுணத்தீவு, குறிஞ்சாமுனை, காயமடு ஆகிய இடங்களில் தற்காலிகமாக முகாமிட்டுள்ள அதிரடிப் படையினர் மீது எமது மக்கள் விடுதலைப்படை கடும் மோட்டார்த் தாக்குதல் மேற்கொண்டுவருகின்றது. இதில் பல கொமாண்டோக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமுற்றும் இருக்கின்றனர்.

கடந்த 17ம் திகதி அன்று கொக்கட்டிச்சோலை என்னும் கிராமத்தை நோக்கி முன்னேற முயன்ற அதிரடிப்படையினரை எஸ்.எஸ். 85 ரக, 80 எம். எம். மோட்டார்த் தாக்குதல் மூலம் முறியடித்து தடுத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்து தற்போதுவரை தாக்குதல் மேற்கொள்[ளப்] பட்ட வண்ணமுள்ளது. [இர]ண்டு பொம்பர்கள், இர[ண்டு] ஹெலிக்காப்டர்கள் ஆ[கிய]வற்றைக்கொண்டு இரா[ணு]வம் முன்னேறமுயன்றபோ[து] கடும் தாக்குதலால் அம்மு[யற்]சிகள் முறியடிக்கப்பட்டன.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பருத்தித்துறையில்

# முகாமிலிருந்து வெளியேறிய இராணுவம் மீது

மக்கள் விடுதலை படை தாக்குதல்

யாழ்ப்பாணம், திங்கள் பருத்தித்துறை ராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட ராணுவத்தின் மீது மக்கள் விடுதலைப்படை தாக்குதல் நடத்தியதில் பலர் கொல்லப்பட்டதாகவும் சிலர் காயமடைந்ததாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுக்காலை 10 மணியளவில் பருத்தித்துறை ராணுவ முகாமிலிருந்து 100க்கு மேற்பட்ட ராணுவத்தினர் சப்பர் மடத்தை நோக்கி புறப்பட்டனர். இவர்களை நோக்கி மக்கள் விடுதலைப் படை வீரர்கள் நவீனரக மோட்டர் கொண்டு ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின்போது பல ராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் சிலர் படுகாயமுமடைந்தனர். மக்கள் விடுதலைப்படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாதராணுவத்தினர் பல இழப்புக்களுடன் முகாம்திரும்பினர். எமக்கு அருகாமையில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகப் போராளிகளும் தாக்குதல் நடத்தினர். (உள)

# கடற்படையினரை எதிர்த்து போராளிகள் தாக்குதல்

-ஈ. பி. ஆர். எல். எவ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து நேற்று பீரங்கி படகில் ரோந்துபுறப்பட்ட கடற்படையினர் மீது தமது மக்கள் விடுதலைப்படையினர் தாக்குதல் மேற்கொண்டு பலத்த சேதப்படுத்தியதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து நேற்று பீரங்கி விசைப்படகில் வெளிவந்த கடற்படையினரை எமது இராணுவமாகிய மக்கள் விடுதலைப்படை நேரடியாக மோதிபலத்த சேதத்திற்குள்ளாக்கியது. நவீன 60 எம். எம். ரக மோட்டார்கள், கலி 30 ரக துப்பாக்கிகள் தன்னியக்கத் துப்பாக்கிகள் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இக்கடும் தாக்குதலில் கடற்படையினரில் பலர் கொல்லப்பட்டும், காயப்பட்டும்,இருக்கலாமென நம்பக்கூடியவாறு உள்ளது எமது தரப்பில் எதுவித சேதமோ இழப்போ இல்லை. [மா-கே]

# தமிழ் அரசியல்கைதிகளின்போராட்டத்திற்கு நாமும் ஆதரவளிக்கின்றோம்-

கிராமிய உழைப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி பூஸா முகாமிலும், வெலிக்கடைச் சிறையிலும் தங்களின் அடிப்படைச் சிறைச்சாலை உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதையும், சிறைச்சாலையிலும் தாம் உயிர் வாழும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதனையும் மனிதாபிமான உலகுக்கும், முஸ்லீம் சகல தமிழ் மக்களுக்கும் எடுத்துக் காட்டுவதற்காகவும், உணர்த்துவதற்காகவும் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ள அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறோம்.

இவ்வாறு கிராமிய உழைப்பாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், மேற்படி சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரசியல் கைதிகளின் போராட்டக் கோரிக்கைகளை நிறைவேற்றாது காலம் கடத்தும் அரசின் போக்கை கண்டிக்கிறோம்.

யாழ். குடாநாடு பூராவும் 26ந் திகதி இன்று முதல் 30 - 9 - 86 வரை "தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்ட இணைப்புக் குழு" முன்னெடுக்கும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கும், 30ந் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கும் எமது ஆதரவை தெரிவிக்கிறோம்:

மேற்படி போராட்டங்களில் வறிய கூலி விவசாயிகள், கிராமிய உழைப்பாளர் சங்கம் ஆகியன யாவும் பங்கு கொள்ள வேண்டும் எனவும் எமது சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது:

இத்துடன், சிறைச்சாலைப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கும் இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் முன்னெடுக்கும் சகல போராட்டங்களுக்கும் எமது ஆதரவை தெரிவிப்பதுடன் சகல தமிழ் பேசும் மக்களையும் இதில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகிறோம். (ச)

மறைந்த

# விடுதலைப்புலிகள் போராளிகளுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்

"ஈழமக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துபோராடி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் விக்டர், ரேம் ஆகியோரின் இழப்பினால் துயருற்றிருக்கும் புலிகள் இயக்க போராளிகளுக்கு எமது ஆறுதல் செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறோம்"

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, விக்டர், ரேம் ஆகியோரின் மரணத்தை முன்னிட்டு விடுத்துள்ள அஞ்சலிசெய்தியில் தெரிவித்துள்ளது

இச்செய்தியில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது, "ஈழமக்கள் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து போராடி வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் விக்டர், ரேம் ஆகியோருக்கு ஈழமக்கள்புரட்சிகர விடுதலைமுன்னணி தனது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது இவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கபோராளிகளுக்கு எமது ஆறுதல் செய்தியை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்"

இருளைக் கிழித்து ஒளியைப் பிரசவிப்பதற்கான
ஈழப் போராட்டம் தொடர்கிறது....
உக்கிரமாக.... மிக உக்கிரமாக..
உன்னதமான எங்கள் போராளிகளும்
உருக்குறுதி வாய்ந்த எங்கள் மக்களும்
நிச்சயம் விரைவில் வென்றெடுப்பார்கள்.

www.tamilarangam.net

# ஈழ புரட்சிகர விடுதலை இயக்க போராளிகளை இழிவுபடுத்த சதி

மக்கள் குரல் 5-9-86

## பத்மநாபா பேட்டி

சென்னை, அக். 5:
தமிழகத்தில் இருந்து கொண்டு செயல்படும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராளிகளை இழிவுபடுத்த சதி நடக்கிறது என்று அந்த அமைப்பின் தலைமை செயலாளர் பத்மநாபா தெரிவித்தார்.

இன்று காலை சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவில் உள்ள சட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் மதிப்பளித்து அதன்படியே தாங்கள் செயல்பட்டு வருவதாக பத்மநாபா தெரிவித்தார்.

இதுவரை ஈழ மக்கள் புரட்சிகர ஈழ மக்கள் விடுதலை முன்னணி, எங்காவது ஒரு தவறான செயலில் ஈடுபட்டது என்று யாரும் கூறமுடியாது என்றார் அவர்.

இந்தியாவில் ஈழ மக்களுக்கு கிடைத்துள்ள ஆதரவையும் வாய்ப்பையும், போதைப் பொருள் கடத்தல் வியாபாரிகள் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஈழ போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு சிறிய அளவில் இந்தியாவில் கஞ்சா வியாபாரம் செய்து வந்த ஈழத்தை சேர்ந்த சில தனி நபர்கள் ஈழப் போராட்டம் தொடங்கிய பிறகு அதிக அளவில் இங்கு உலவ ஆரம்பித்து விட்டார்கள்.

அப்படி யார், யார் ஈழத்திலிருந்து வந்து இங்கு போதை பொருள் கடத்தல் விற்பனை செய்கிறார்கள் என்ற விபரத்தை அம்பலப்படுத்தவிருப்பதாகவும் பத்மநாபா கூறினார்.

இலங்கையிலிருந்து வந்து இங்கு போதை பொருள் கடத்தும் தனியாரை பிடிப்பதற்கு போலீசுக்கு தங்கள் ஒத்துழைப்பைத் தரவிருப்பதாகவுமற் பத்மநாபா கூறினார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் சமீபத்தில் பத்திரிகையில் ... யான ஒரு செய்தியையும் அவர் ... தார்.

சென்னை மேத்தா நகரில் வசி... வரும் முருகதாஸ் என்பவரை மிர... அவரிடமிருந்த பொருள்களை ஈழ ம... புரட்சிகர விடுதலை இயக்கத்தைச் சே... சிலர் எடுத்துச் சென்றதாக போ... புகார் கூறப்பட்டிருந்தது.

இந்த புகார் உண்மை அல்ல எ... முருகதாஸ் போதை பொருள் கட... தொழிலில் ஈடுபட்டு வருபவர் எ... தங்கள் இயக்கத்தை இழிவுபடுத்... அவர் அவ்வாறு புகார் கூறியிருக்... என்றும் பத்மநாபா கூறினார்.

தனி நபர் ஒருவர் புகார் கொ... இந்த புகார் அடிப்படையில் ஈழ ம... புரட்சிகர அமைப்பு அலுவலகத்... விசாரிக்க வந்த போலீசார் தங்களை... யாதை குறைவாக நடத்தியதாகவும் ... தாபா கூறினார்.

தங்கள் ஸ்தாபனத்தை வெளி... ஏதோ ஒரு' சக்தி எடுத்த முயற்சி... வினாவே இந்த சம்பவங்கள் என்று ... பத்மநாபா இந்த சூழ்நிலையில் த... டைய உண்மை நிலை குறித்து ம... மாநில அரசுக்கு மனு கொடுத்திருப்... கூறினார்.

இன்று ஏற்பட்டுள்ள இந்த நி... அனைவரும் புரிந்து கொள்ளும் வ... இன்று முதல் அடுத்த மாதம் 5-ந்... வரை இ.பி.ஆர்.எல்.எப். அலுவலக... யும், ஈழ மக்கள் செய்தி தொ... நிலையத்தையும் மூடுவது என்று மு... டுத்திருப்பதாகவும் பத்மநாபா கூ...

இலங்கை அரசுடன் தமிழர் ஐ... விடுதலை முன்னணியினர் நடத்தி ... பேச்சு வார்த்தையில் தங்களுக்கு ... பாடில்லை என்று ஒரு கேள்விக்... அளிக்கையில் பத்மநாபா தெரிவி...

தனித்தனியாக போராடும் ஈழ... ராளிகள் அமைப்புகளை ஒன்றுபடு... பணியை தொடர்ந்து செய்து வரு... வும் அவர் தெரிவித்தார்.

திரிகோணமலை பகுதியில் பல... போராளிகள் அமைப்புகளும் தனி... யாக திட்டமிடப்படாத திடீர் தா... கள் நடத்துவதால்தான் சிங்கள ரா... தினரின் அடக்குமுறையை கட்டுப்... முடியவில்லை என்று கூறிய பத்நாப... அமைப்புகளும் சேர்ந்து திட்ட... தாக்குதல் நடத்தினால் சிங்கள ரா... தின் அட்டகாசத்தை முறியடித்து... லாம் என்று கூ...

பேச்சு வார்த்தையில் ... கொண்டு கிடைக்கிற உரிமையை ... றுக் கொண்டு கொஞ்சகாலம் க... பிறகு போராட்டம் தொடங்கினால்... என்று கேட்டதற்கு "எங்கள் சுயநி... கால தமிழ் ஈழ நாட்டு எதிர்கால ... னரின் உரிமையை நாங்கள் விட்டு... ... தயாராக இல்லை என்று பத்... ...ர்.

# EPIC in Madras "closed for a month in protest"

THE HINDU 6-9-86

MADRAS, Oct. 5.

The Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) has decided to close down its public relations outfit, the Eelam People's Information Centre (EPIC), in the City for a month from today as a "symbolic" protest against certain incidents which tended to defame the organisation. The move was also to draw the attention of Government of India, the people of Tamil Nadu and the State police to such incidents.

Announcing this at a press conference here today, Mr. A. Varadaraja Perumal, an EPRLF spokesman, said that two of its members were beaten up on September 29 by some Sri Lankan Tamils when they went to question some Sri Lankan Tamils' ...ken behaviour at Mehta Nagar, Aminjikarai in the City. These Tamils were also drug traffickers, he alleged. On October 1, two police constables, accompanied by two Sri Lankan Tamils, came to the EPIC office at Choolaimedu and created a scene. A police Inspector also visited the office the same afternoon and ordered EPIC men about. But a different version of the clash between the EPRLF men and the Sri Lankan Tamils appeared in a section of the press on October 4, he said. The EPRLF also had reported the incident to the police higher-ups immediately. "What is the motive behind the behaviour of the policemen who say at the same time that we have not violated the laws of the land," he asked.

**No link with drug trafficking:** Asserting that the EPRLF did not have any contact with drug traffickers, Mr. Varadaraja Perumal said that the traffickers were capitalising on the support given to the Sri Lankan Tamil organisations, but the Tamil organisations were helpless in controlling them.

As a "symbolic" protest against these incidents which brought out the organisation in bad light, it had decided to close down its EPIC office in the City temporarily. It would make use of the time to expose those indulging in drug trafficking.

Replying to a question, he said that drug trafficking was a separate, individual problem and 'not an organisational question".

**Eastern Sri Lanka tense:** The EPRLF Secretary-General, Mr. K. Padmanabha, said the situation was very tense in eastern Sri Lanka. The militants had some control of Batticaloa district, but the situation was tense in Trincomalee. The EPRLF was trying to bring about unity with other groups including the LTTE. On the ground, there was unity among the groups while attacking the Sri Lankan army. "But this unity is not on the basis of a programme. We can win our struggle only on the basis of a programme."

Asked whether the militants would attend the third round of talks, he said the TULF and the ruling United National Party of Sri Lanka were engaged in discussions. There was no connection between the Tamil militants and the discussions.

EPIC தரும் ஈழச்செய்திகளை தொடர்ந்து அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்....
48-74-60-43.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டு-திருமலே வீதியில் —

# இராணுவம் மீது போராளிகள் 'கோர்ண் சார்ஜ்' தாக்குதல்

## ஐந்துக்கு மேற்பட்டோர் பலி—ஈ. பி. ஆர். எல். எவ்

யாழ்ப்பாணம், சனி
ருகோணமலே வீதியில் இரா
வத்தினர்மீது மக்கள்
டுதலேப்படை மேற்
கொள்ளப்பட்ட "கோர்ண்
ர்ஜ்" தாக்குதலில் ஐந்துக்கு
மற்பட்ட இராணுவத்தினர்
கொல்லப்பட்டனரென ஈழமக்
ள் புரட்சிகர விடுதலே முன்
ணி விடுத்துள்ள அறிக்கை
யொன்று கூறுகிறது.

அவ்வறிக்கையில் கூறப்பட்
டுள்ளதாவது:

மட்டுநகரில்உள்ள வவுனதீவு இராணுவ முகாமின் பலத்தினை அதிகரிக்கும் முகமாகவும் போராளிகள் முகாம்களை நிர்மூலமாக்கும் நோக்குடனும், ஏற்கனவே எம்மால் தகர்க்கப்பட்ட வலேயிறவு பாலத்தை திருத்தியமைக்கும் நோக்குடனும் மட்டுநகர் இ. போ. ச.வைக்கு சொந்தமான பாரந்தூக்கி இயந்திரத்தை எடுத்துவருவதற்காகவும் சென்ற இராணுவத்தினர்மீது மட்டுநகர் திருகோணமலே பிரதான வீதியில்வைத்து கடந்த புதன்கிழமை காலே 11 மணியளவில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலே முன்னணியின் இராணுவப்பிரிவாகிய மக்கள் விடுதலேப்படையினரால் கோர்ண் சார்ஜ் தாக்குதல் செய்யப்பட்டது இதில் ஐந்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் முள்ளனர்.

இத்தாக்குதல் அண்மையில் மட்டுநகரில் 48அப்பாவிபொது மக்கள் இராணுவத்தால்கொல்லப்பட்டதற்கு பதிலடியாக செய்யப்பட்டது இதில் போராளிகளுக்கோ, பொது மக்களுக்கோ எவ்வித சேதமும் இல்லே.

இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [கே]

---

வுனியா, மாமடுவில் —

# ஹெலி' போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது; 4 படையினர் பலி

## —ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், சனி
வனியாவில் உள்ள மாம
என்னும் இடத்தில் தமது
ராளிகளுக்கும் இராணு
தினருக்குமிடையே ஏற்
ட நேரடி மோதலின்
து இராணுவத்தினருக்கு
வாக வானத்திலிருந்து
பாக்கிப் பிரயோகம் நடத்தி
கொண்டிருந்த ஹெலி
ப்டரை நோக்கி எதிர்த்
குதல் நடத்தியதில்
ி சேதமுற்ற நிலேயில்
ந்து நொறுங்கியதாகவும்
பயணம் புரிந்த 4இரா
த்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலே முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டவ இராணுவத்தினருள் ஒருவர் உயரதிகாரி ஆவர். நொறுங்கிய ஹெலியின் பாகங்களே இராணுவத்தினர் வாகனங்களில் எடுத்துச் சென்றனர். இவர்களே நோக்கி ஈ. பி. ஆர். எல். எவ் போராளிகள் தன்னியக்க ரைபிள்கள், மோட்டார்கள் கொண்டு நடாத்திய பலமான எதிர் தாக்குதலே அடுத்து இவர்களும் அவ்விடத்திலிருந்து பின்வாங்கிச்சென்றனர். இச்சம்பவம் முதலாம் திகதி மதியம் இரண்டுமணியளவில் இடம்பெற்றது. இதன் போது எமது தரப்பில் எதுவித சேதமும் இல்லே" என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

---

தோழ!
நம்பிக்கையோடு
நாங்களிருக்கிறோம்.
துளிர் விட்டு வளரும்
பூச்செடியில்
புதிதாய் அரும்பும்
பூக்களுக்காக

சிறகு முளைத்த
இளம் பறவைகள்
சிறகடித்துப் பறக்கும்
இலக்குக்காக

எங்களை
நெருங்கி வருகின்ற
மரணத்துக்காக
நம்பிக்கையோடு
நாங்கள்
காத்திருக்கிறோம்!

---

ருமலேயில் கடந்த 3 நாட்களாக

# மக்கள் விடுதலேப் படை இராணுவம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி
ருமலேயில் கடந்த மூன்று
ட்களாக இராணுவத்தினர்
தமது மக்கள் விடுதலேப்
டயினர் தாக்குதல் மேற்
ண்டுவருவதாக ஈழமக்கள
ட்சிகர விடுதலே முன்னணி
த்துள்ள அறிக்கையில்
ிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்
டுள்ளதாவது:-

"கடந்த 30-ம் திகதி திருகோணமலேயில் இரண்டுவிசைப் படகுகளில் மனித வேட்டைக்காக வந்த இராணுவத்தினரை எமது இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலேப்படை எதிர்த் தாக்குதல் நடத்தி முறியடித்து பின்வாங்க வைத்தனர்.

நேற்று முன்தினம் திருகோணமலேயில் இராணுவத்தினர் மீது நவீன மோட்டார் தாக்குதல் மேற்கொண்டதில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இத்தாக்குதலே அடுத்து பிற்பகல் ஹெலிகாப்டர்மூலம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 2 பொம்பர் விமானமும் சேர்ந்துகொண்டு குண்டுத்தாக்குதல் மேற்கொண்டன. இவற்றை எதிர்கொண்ட எமது தரப்புத் தோழர்களுக்கு எதுவித இழப்பும் இல்லே.

நேற்றுக் காலே 7 மணி தொடக்கம் இரண்டு ஹெலிகொப்டர்கள் சாம்பல்தீவைச் சுற்றி தாக்குதல் மேற்கொண்டன பொம்பர்விமானங்களும் சுற்றிவளைத்தும் இருந்தன இராணுவத்தை உட்செல்ல விடாது மக்கள் விடுதலேப் படையினர் தாக்குதல் மேற்கொண்டுவருகின்றனர்."

வெளியீடு: ஈழமக்கள் புரட்சிகர விடுதலே முன்னணி (பிரசாரப்பிரிவு)